# சின்னமனூர் சிவகாமி உடனுறை பூலாநந்திசுவரர் கோவில் தலவரலாறும் அமைப்பு முறைகளும்

**சு.தனலெட்சுமி மற்றும் சு.காந்திதுரை**

தமிழ்த்துறை

தியாகராசர் கல்லூரி,மதுரை

## முன்னுரை

நாட்டுப்புற மக்களிடையே மிகவும் செல்வாக்குப் பெற்றிருக்கும் வழக்காறுகள், சமய நம்பிக்கைகளையும் வழிபாடுகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. மூர்த்தி தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் பெருமையுடைய சின்னமனூர் என்னும் அரிகேசரி நல்லூரின் பூலாநந்தீசுவரருடைய தலவரலாறும், அமைப்புமுறைகளும், வாயிலாக சமுதாய மக்களின் வாழ்வியல் சார்ந்த பண்பாடுகளையும், மரபுகளையும் நம்பிக்கைகளையும், வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. இருந்தாலும் இக்கோவில்களில் சொல்லப்படுகின்ற புராணங்களில் வாயிலாக சமூகக் கட்டமைப்பைக் கண்டறிய முடிகின்றன.

## ஆய்வு அணுகுமுறைகள்

கோயில்களின் கட்டிடக்கலை அமைப்பும் திருவிழாக்களில் வழிபாட்டு தன்மைகளை உற்றுநோக்கி விளக்குவதால் விளக்கமுறைத் திறனாய்வும் (Descriptive Approach) பண்பாடுகளைப் பகுத்தாய்வதால் பகுப்புமுறைத் திறனாய்வும் (Analytical Method) பின்பற்றப்படுகின்றன. திருவிழாவிலும், வழிபாட்டிலும் ஒவ்வொரு சமுதாயத் தினரின் பழக்கவழக்கம் பற்றி வெளிப்படுவதால் சமூகவியல் அணுகுமுறையும் (Social Approach) உளவியல் அணுகுமுறையும் (Psychological approach) மேற்கொள்ளப் படுகின்றன.

## தலவரலாறு

இக்கோவில் வீரபாண்டியைத் தலைநகராகக் கொண்டு 'அளநாடு' என்ற பேரில் அப்பகுதியைப் பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஊரை 'அரிகேசரி நல்லூர்' என்று அழைத்திருக்கிறார்கள் என்பதை கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகிறது. பின்னர் இராணிமங்கம்மாள் காலத்தில் (1689-1706) எரசக்க நாயக்கனூர் ஜமீன்தார் சின்னம்மநாயக்கரால் இவ்வூர் 'சின்னமனூர்' என அழைக்கப்பெற்றது.

"பாண்டிய நாட்டின் ஒரு பகுதியான அளநாட்டை வீரபாண்டியைத் தலைநகராகக் கொண்டு குலபூமண பாண்டிய மன்னனின் இளைய மைந்தன் இராஜசிங்க பாண்டியன் என்னும் இராஜசிம்மபாண்டியன் குடிமக்களின் குறைதீர்க்க வேட்டையாடும் கோலத்தில் புறப்பட்டு வந்தான். பூலாவனத்தின் மேற்கே சுரபி நதி என்னும் முல்லை ஆற்றங்கரையில் முகாமிட்டான்." அவ்வட்டாரத்தில் வாழ்ந்த ஆயர்குலத் தலைவனை அழைத்துத் தினந்தோறும் அங்கு தான் முகாம் முடியும்வரை பால் கொண்டு வந்து தருமாறு ஆணையிட்டான்.

## புராணக்கதைகள் (தோற்றம்)

இறைவன் ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் பல இடங்களில் தோன்றுவது போல கதைகள் உள்ளன. அந்த ஆயர்குலத் தலைவனும் மன்னருக்குப் பூலாவனத்தின் வழியே தினமும் பால் கொண்டு வரும் போதெல்லாம் ஒரு பூலா மரத்தின் வேர் தடுக்கி நிலத்தில் விழ நேர்ந்தது. பால் முழுவதும் அந்தப் பூலாமரத்தின் அடியிலேயே வேரில் கொட்டியது. தொடர்ந்து அடுத்தடுத்து அவ்வாறே நிகழ்ந்ததால் ஒரு நாள் வேர் தடுக்கி விழுந்தவுடன் கோபத்துடன் எழுந்த ஆயர்குலத் தலைவன் இடறிய பூலாமரத்தின் வேரை கோடரியால் அடியோடு வெட்டினான். அப்போது பூலாமரத்தின் அடியிலிருந்த சிவலிங்கத்தின் முடியில் கோடரி பட்டதால் செங்குருதி பீறிட்டு வெள்ளம் போல் வெளியெல்லாம் பரவியது. ஆயர்குலத் தலைவன் அதனைப் பார்த்து அயர்ந்தான். கீழே விழுந்து பின்

எழுந்து பின் அழுது தொழுதான். அரசனிடம் என்ன சொல்வது என்று பயந்து கொண்டே வருத்தத்தோடு வேகமாக ஓடி அரசன் திருவடியை வணங்கி நின்றான். அரசன் இராஜசிம்மபாண்டியன் ஆயன் பால் கொண்டு வராததை அறிந்து கோபக் கனலோடு 'ஏன் பால் கொண்டு வரவில்லை' என்று கேட்க ஆலனோ, அஞ்சி நடுங்கிக் கொண்டே பால் கொண்டு வராமைக்கான காரணங்களையும் நடந்த சம்பவங்களையும் அடுக்காக எடுத்துச் சொன்னான்.

## இறைவன் திருவுருவ ஜோதி

"அரசன் பதறிய எழுந்த நிலையில் அவ்விடம் போய் நின்று பார்த்தான் சிவலிங்க உருவத்தில் இருந்து வெளியேறிய சிவந்த இரத்தத்தைக் கண்டு திருக்குற்றான் மயங்கினான். அக்கோலம் காணவோ நான் பிறந்தேன்' என்று துயரத்தில் ஆழ்ந்து துதிக்கலானாள், பீறிட்ட செங்குருதி மாறி ஆகாயத்தில் ஊடுருவி நிற்கும் ஒரு ஜோதி மலையாய் நின்றது. இதனைப் பார்த்த அரசன் 'இது இறைவன் திருவருளே' என்று எண்ணி ஆனந்த வெள்ளத்தில் மகிழ்ந்தான்."[2]

"அவனுள் ஒடுங்கியுள்ள அந்நிலையில் அவன் எதிலும் தோயாது இருக்கிறான். இவ்வாறு எவற்றோடும் தொடர்பின்றி நிற்கும் சிவனை அநாதி சிவன் என்றும் உலகத்தோடும், உயிர்களோடும் தொடர்பு கொண்டு அதனைப் படைத்துக் காத்து, அழித்து மறைந்து அருளுகின்ற சிவனை ஆதிசிவன் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது."[3]

என்னை ஆட்கொள்ள வந்த இறைவா உன் விசுவரூப தரிசனம் தந்தால் நான் எப்படி பூஜிப்பது என்று இறங்கி நின்றவுடன் அரசனின் அன்புக்கு அன்பாக இறைவர் நின்று அருளினார். அண்ட சராசரங்கள் எல்லாம் தன் உள் கொண்டு உலகாளும் ஆண்டவன், அரசன் இராஜசிம்மபாண்டியனின் அளவுக்கே குறுகி நின்ற அவ்வடிவம் கண்டு வியந்தான். ஆனந்தத்தில் இறைவனை ஆரத் தழுவினான். முகம் புதைத்து அழுதான். அரசன் அன்புக்குக் கட்டுண்ட இறைவனும் தன் சிவலிங்க வடிவத்தில் அரசனுடைய முக மண்டலமும், அரசனது மார்பில் அணிந்திருந்த ஆரமும், அரசனது கைக் கடயங்களும் தன் திருமேனியில்

பதியும் வண்ணம் குழைந்து அருளினார். ஈசர் இன்றளவும் அவ்வடை யாளங்கள் மூலவரின் திருமேனியில் தெள்ளத் தெளிவாகவே உள்ளன.

சிவபெருமான் பூலான் ஆரணியில் இருந்தமையால் 'பூலாவனேசர்' மற்றும் பூலாநந்தீசுவரர்' என்றழைக்கப் படவில்லை.

**இறைவன் பல பெயரில் காட்சித் தருதல்**

இறைவனே! நீ பூலா ஆரணியத்தில் இருந்தமையால் 'பூலாவனேசர்'

திருமால் முதலியோர் பூசித்ததனால் 'அரிசேசரிநாதர்'

ஆயர் பாற்குடம் இடறிச்சொரிந்த பாலை உண்டதால் 'பாலுண்டநாதர்'

பின் எனக்காக 'அளவுக்கு அளவானவர்' என்றும் 'தழுவக் குழைந்தவர்'

இன்று நான் உன்னைப்பூசித்துப் போற்றியதால் என்பேரால் 'இராசசிம்மேசுவரர்'

ஒருவராலும் அறியப்படாத 'சித்' உடையவன் இறைவன் என்பது சைவ சித்தாந்தம் 'சத்துவம்' இராசதம், தாமதம் என குணவேறுபாடுகளைக் கடந்தவன் என்ற பொருளில் இறைவன் நிற்கிறான் என்று பேசப்படுகிறான் எவ்வித வடிவத்திலும் அவன் அடங்கான். எவ்வகை மலங்களினாலும் கட்டுப்பட்டவன் அல்லன். ஆதலால் அவன் நிமலன், வியாபகன் எனப்படும் பெருநிலையில் ஏகனாக நிற்கிறான்.

## கோவில் அமைப்பு திருப்பணிகள்

இக்கோவில் அரசன் இராசசிம்மன் நல்லாட்சி புரிந்து வரும்போது இறைவனுக்குத் திருக்கோயில் கட்டி மனமாரத் திருப்பணிகள் செய்தான். திருப்பணிகளில் தன்னை முபமையாக ஈடுபடுத்திக் கொண்டு 'திருவருள் துறை' என்னும் கருவறை, அர்த்தமண்டபம், நிருத்தமண்டபம், பலிபீடம், பதினாறுகால் மண்டபம், சந்தியா மண்டபம், ஆவரண மண்டபம், முதலிய மண்டபங்களும், விமானங்களும், கோட்டைத் திருமதில்களும், அகழியும் ஆழமாகச் செய்து முடித்தான்.

அதன் பின்னர் இத்திருத்தலத்தில் அனைவரும் வழிபடும் வகையில் சிவகாமி அம்மையையும், திருக்கோயிலின் இடபாகத்தில் கிணற்றிலிருந்து சிவகாமி அன்னை உருவமாகத் தென்பட அப்படியே அதனையும் சிற்பமாய் எடுத்துப் பிரதிஷ்டை செய்தான். அடுத்துச் சந்திரசேகரன், கங்காளர், நடராசர், தட்சிணாமூர்த்தி, சூரிய, சந்திரர்கள், நவகிரகங்கள், விநாயகர், சுப்பிரமணியர், துர்க்கை, காளி, பைரவர், சப்தமாதர்கள், சரசுவதி, திருநந்தித்தேவர், உற்சவ மூர்த்திகளாகவும் செய்து முடித்தான். அம்மைக்குத் தனித் திருக்கோயிலும், மடைப்பள்ளி யாகசாலை, தேர், கொடிமரம் முதலியனவும் செய்து முடித்தான். பின்னாளில் ஊர்பொதுமக்கள் ஒன்றுகூடி ஏழு நிலை இராஜகோபுரம் புதிதாகக் கட்டி 10.6.1996ஆம் நாள், ‘பெருஞ்சாந்திப் பெருமங்கல விழா என்னும் திருக்குடமுழுக்குச் செய்து சமூக ஒற்றுமையுடன் கொண்டாடப்பட்டன.

## இக்கோவில் திருவிழாக்கள்

இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் விழாக்களின் நிகழ்முறைகள் குறித்து விளக்கமுறையிலும் பகுப்பாய்வு முறையிலும் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றது.

சித்திரை மாதம் : தீர்த்தவாரி சித்திரைப் பெருந்திருவிழா

வைகாசி : விசாக நட்சத்திரம், திருமுருகன் பால் குடவிழா

ஆனி : ஆனித் திருமஞ்சன விழா

ஆடி : முளைக்கொட்டுத் திருநாள். அம்மன் தபசு

ஆவணி : புட்டுத்திருவிழா, விறகு விற்றல் திருவிழா

புரட்டாசி : நவராத்திரி விழா.

## கருவறை அமைப்பு

இந்தத் திருக்கோயிலிலே கருவறையில் இருக்கும் கடவுள் திருமேனியைப் பார்க்கையில் ஓர் அதிசயத்தை சந்திக்கிறோம். வழிபாடும் நாம் நின்றாலும், அமர்ந்தாலும் ஒரு சின்ன மேசை வைத்து அதன்மீது

ஏறிநின்று பார்த்தாலும் மூலவர் திருமேனி ஒரே மட்டத்திற்குள் வந்துவிடும். இப்படி ஓர் அதிசயமான சிலையாகப் பார்க்கிறோம். இவ்வாறு ஒரு வியப்பான வடிவமைப்பை இச்சிவலிங்கம் பெற்றுள்ளன.

## வரலாற்று நோக்கில் கோவில் அமைப்புகள்

1311-ஆம் ஆண்டில் தில்லியை ஆண்ட அலாவுதீன் கில்ஜியின் பிரதிநிதியாகத் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்த மாலிக்காபூரின் படைகள் வீரபாண்டி வழியாக சின்னமனூர் வரை வந்த செய்தி தென்னிந்தியா வரலாற்றில் உண்டு.

இந்துக் கோயில்களைத் தரைமட்டமாக்குவதும், திருவுருவங்களைச் சிதைப்பதும் அந்தக் கோயில்களில் உள்ள பொன்மணி, முத்துக்களால் ஆன ஆபரணங்களை மற்றும் நகைகளை அப்படியே கொள்ளையடிப்பதுமே குறிக்கோளாக வைத்துப் படையெடுத்து வந்துள்ளனர். அதன் பின்னர் மாலிக்காபூரின் பிரதிநிதியின் தலைமையில் வந்து படையினர் பின் வாங்கிச் சின்னமனூர் எல்லையிலே நின்று அப்படியே திரும்பிச்சென்றுவிட்டனர். இந்தப் படையெடுப்புக் காலங்களில்தான் அங்கங்கே கோயில்களைப் பாதுகாக்கப்பட்டன.

## சித்திரைப் பெருவிழாக்கள்

இக்கோயிலில் ஆண்டுதோறும் சித்திரைப் பெருவிழா மிருகசீரிட நட்சத்திரத்தில் திருக்கொடியேற்றத்துடன் தொடங்கிப் பதினாறு நாட்கள் வெகு விமரிசையாய் நடைபெறுகின்றன.

***“பண்ணியாழப் புலவர் பாடற் பாணரொ***
***டெண்ணருஞ் சிறப்பி னிசைசிறந் தொருபால்***
***முடிவுக்கண் டுயிலாது முடுக்கரும் வீதியும்***
***விழவுக்களி சிறந்த வியலுளாங்கண்”*** [4]

பதினாறு நாட்களிலும் அனைத்து சமூகத்தாரின் மண்டகப் படிகளிலும் சுவாமி அம்மனோடு எழுந்தருளி அருள் பாலிக்கினற்ன. ஆண்டின் அனைத்து மாதங்களிலும் விசேச நாட்களில் விசேச பூஜைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலில் தினசரி ஆறுகாலப்பூசைகள்

நடைபெற்று வருகின்றன. சிவபெருமானுக்குரிய சிறப்பு நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாதமும் மாதாந்திர வெள்ளியன்று திருவிளக்கு பூசையும் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன.

இத்திருக்கோயிலில் உபகோயிலான அருள்மிகு இலட்சுமி நாராயணப் பெருமாள் திருக்கோயிலிலும் புரட்டாசி நான்கு சனி வாரங்களும் விசேச பூசைகள் நிகழ்கின்றன.

## வழிபாடுகள்

கடலோடு கலக்கும் ஆறுகள் போல் எல்லாத் தய்வ வணக்கமும் என்னையே அடைகிறது என்று கண்ணபிரான் சொன்னது உண்டு. ஆறுகளைக்கூட எண்ணிவிடலாம். ஆனால் தெய்வங்களையும் தேவதைகளையும் வழிபாடுகளையும் எண்ணுவதும் எழுதுவதுமாகும்.

“கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பது ஒரு முதுமை மொழி - ஆனால் இன்று கோயிலில்லா ஊர்களே இல்லை என்பது மட்டுமல்ல, குடியில்லா ஊர்களில் கூடக் கோவில்கள் இருக்கின்றன. மனிதமனம் ஒரு பலமற்றகொடி அது தன்னால் நிமிர்ந்த நிற்க முடியாதது. எனவே கடவுள் தலைவர் போன்ற ஏதாவது ஒரு வழிபாட்டின் முதுகில் ஏறிக்கொள்வது”[5] அன்று தொட்டு இன்றுவரை இயல்பாயிருந்து வருகின்றன.

நாட்டுப்புறச் சமயத்தில் சைவம், வைணவம் என்ற பாகுபாடுகள் இல்லை. அதோடு கிறித்தவம் இசுலாமியம் என்ற வேறுபாடுகளும் இல்லை. சில கோவில்களுக்குக் கிறித்தவர்களும் வழிபாடு செய்கின்றனர். அதன் வழியாக இசுலாமிய கோவில்களுக்கு இந்துக்களும் போவது நாட்டுப்புறங்களில் மட்டுமே காண முடிகின்றன.

## வைகாசி விசாகம் விழாக்கள்

இக்கோவிலில் முருகக் கடவுள் அவதாரம் செய்த நாளாகும். வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்தில் வரும் சிறப்பு நாள் இதுவாகும். விசாகம் ஆறு நட்சத்திரங்கள் ஒழுங்கு கூடிய தொன்று.

இதனால் முருகனும் ஆறுமுகங்களோடு திகழ்பவர் என்பது ஐதீகம். இந்நாள் சோதிநாள் எனவும் அழைக்கப்படுகின்றன. உயிர்களுக்கு நேரும் இன்னலை நீக்கும் பொருட்டு சிவன் ஆறுமுகங்களாய்த் தோன்றி தம் திருவிளையாடலால் குழந்தையானது இந்நாளில் மக்கள், பிராணிகள், தாவரங்கள் எல்லாம் இணைக்கப்பட்டிருக்கும் இதனால் சைவர்கள் இந்நாளில் விரதமிருந்து ஆலயங்களில் சிறப்பாக வழிபாடுகள் கொண்டாடப்படுகின்றன.

## ஆனித்திருமஞ்சனம் திருவிழாக்கள்

இக்கோவில் ஆனி மாதம் திருமஞ்சனம் அபிஷேகப் பிரியரான சிவனாருக்கு உத்திரம் நட்சத்திரத்தில் சிறப்பு அபிஷேகங்கள் செய்து பூஜிக்கும் நாளாகும்.

ஆடல் நாயகன் நடராஜ பெருமானை அலங்காரங்கள் செய்து, அவருடைய நடனத் திருக்கோலத்தை தரிசிக்கும் திருநாள், தேவர்கள் தினமும் ஆறுமுறை நடராஜருக்கு அபிஷேகம் செய்து வழிபடுகின்றன. இக்கோவிலில் மூன்றுமுறை நட்சத்திர நாளிலும் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. ஆகம விதிகள் படி இறைவனுக்கு அபிஷேகங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

## ஆடிப்பெருக்கு விழா

இக்கோவிலில் விழாவின் ஆடிப் பதினெட்டாம் பெருக்கு என்று அழைக்கின்றார்கள். இவ்விழா குடும்ப விழாவாகவும், நீராட்டு விழாவாகவும் கொண்டாடப் படுகின்றன.

புதுமணத் தம்பதிகளை அழைத்துச் சீர் செய்து சிறப்புச் செய்யும் விழாவாகவும் சமூக உறவுகளையும், குடும்ப உறவுகளையும் வலுப்படுத்தும் விழாவாகவும் இவ்விழா இறைவனுக்கு கொண்டாடப்பட்டு வருகின்றன. அவ்வகையில் விழா நதி நீராடலோடு தொடர்புடைய விழாவாக அமைகின்றன.

***"தீது நீங்கக் கடலாடியும்***
***மாசுபோகப் புனல் படிந்தும்"***[5]

என்று பட்டினப்பாலை எடுத்துரைக்கின்றன.

## ஐப்பசி திருவிழா

இக்கோவிலில் ஐப்பசி மாதத்தில் சூரியன் துலா ராசியில் இருப்பார். அப்போது தேய்பிறையின் (கிருஷ்ணபட்சம்) பதினான்காம் நாளில் தீபாவளி கொண்டாடப்படுகின்றன.

“கடவுளின் அன்னையாக கருதப்படும் அதிதியின் காது வளையங்களையும் ஏராளமான பெண்களையும் சிறைபிடித்தும், துன்புறுத்தியும் வந்தான். நரகாசுரனின் கொட்டம் நாளுக்கு நாள் அதிகரித்ததால் தேவர்களும் கடவுள்களும் கிருஷ்ணனை சந்தித்து நரகாசுரனை ஒடுக்கி, அவனிடமிருந்து விடுதலை பெற்றுத்தர வேண்டும் என்று வேண்டினர்.”[6]

அமாவாசை நாளில் ராமர் அயோத்திக்கு வருவதை அறிந்த மக்கள் அனைவரும் தங்கள் இல்லங்களில் தீபங்களை ஏற்றி வரவேற்றதாலேயே தீப ஒளித் திருநாளாகக் கொண்டாடப்படுவதாக இக்கோவிலில் அனைத்துக் கிராம மக்களும் ஒன்றிணைந்து வழிப்படுகின்றன.

## கார்த்திகை விழா

இறைவனுக்கு கார்த்திகை “விளக்கீட்டு விழா” கிராமங்களில் கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டு வரும் ஒரு விழாவாகும். இதனைப் பெண்களுக்குரிய விழா என்றே கூறலாம். இவ்விழாவின் போது பெண்கள் வீடுகளில் விளக்கேற்றி வழிபடுகின்றனர்.

## மார்கழி விழா

இக்கோவிலில் முதன்முதலில் தன் வயலில் விளைந்த நெல், கம்பு, சோளம், கரும்பு, வாழைப்பழம், திராட்சையாக படி அளத்தல் விழாவாக கொண்டாடப்படுகின்றன.

## தை மாதம் தெப்பத்திருவிழா

கிராம மக்கள் பொங்கல் நாளன்று கறவை மாடுகளையும், காளைகளையும் நீர்நிலைகட்கு அழைத்துச் சென்று நன்கு குளிப்பாட்டி

கொம்புகளுக்கு வர்ணம் பூசுகின்றனர். மாடுகளின் கழுத்தில் மணிகட்டி, பூவிட்டு அலங்காரம் செய்கின்றனர். மாலையில் கிராமங்களில் 11 பொங்கலுக்கு குறையாமல் இறைவனுக்குப் படையல் செய்து வழிபடுகின்றனர்.

## மாசி சிவராத்திரி விழா

மகா சிவராத்திரி நாளன்று தென்னாடுடைய சிவனை தரிசனம் போற்றி என்று அபிஷேகப் பொருட்களும் வில்வமும் செவ்வரளி முதலான மலர்களும் சமர்ப்பித்து வழிப்படுகின்றன. பூஜையில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு நம்மால் முடிந்த தயிர்சாதம், எலுமிச்சை சாதம், புளியோதரை முதலான உணவை தானமாக, பக்தர்களுக்கு கொடுத்து வழிப்பட்டு வருகின்றனர்.

## பங்குனி உத்திரவிழா

இக்கோவிலில் பங்குனி உத்தரவிழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ்விழாக் காலங்களில் கிராமக்கள் பால்குடம் எடுத்து இறைவனை வழிபட்டு செல்கின்றனர்.

## சிவனுடைய வாகனங்கள்

கோவிலில் உள்ள தெய்வத் திருமேனிகள் திருவீதி உலா வரும்பொழுது ஒவ்வொரு தெய்வத்திற்கும் என தனித்தனி வாகனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆவரண தேவதைகளுக்கும் தனித்தனி வாகனங்கள் உள்ளன. இந்த வாகனங்களில் முதலாவதாக வருவது மரவாகனமாகும்.

மரவாகனம் “விருக்ஷ வாகனம்”

நந்தி வாகனம்

பூதவாகனம்

நாக வாகனம்

ரிஷப வாகனம்

யானை வாகனம்

## தேர் திருவிழாக்கள்

இக்கோவில் திருவிழாவின் போது தேரோட்டத்தன்று ஊரில் உள்ள முக்கியப் பிரமுகர்கள் வடம்பிடித்து இழுத்து ஆரம்பித்து வைக்க ஊர்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வடம்பிடித்து இழுப்பார்கள். தேர் தெருவின் திருப்பங்களில் செல்லும் பொழுது திரும்புவதற்கு ஏதுவாக யானைகட்டையை சக்கரத்தின் அடியில் வைத்து நகர்த்தி செல்லுகின்றனர்.

தேரோட்டத்தில் யார் வேண்டுமானாலும் தேரை வடம்பிடித்து இழுக்கலாம். இவ்விழா சமய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

ஊர் கூடித்தேர் இழுத்தால் மட்டுமே தேர் நிலைக்கு வந்து சேரும். சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை தேரோட்டத்திருவிழாவாக அமைகனற்ன.

## பிரதோஷ வழிபாடு

சிவபெருமானுக்கு நடைபெறும் சிறப்பு அபிஷேகங்கள் மாதம் இருமுறை நடைபெறுகின்றன. இந்த சிறப்பு வழிபாடு இக்கோவிலில் பிரதோஷ காலத்தில் நடைபெற்று வருகின்றன. பிரதோஷ காலம் என்பது வளர்பிறையில் சதுர்த்தியன்றும் தேய்பிறையில் திரயோதசி அன்றும் மாலை நாலரை மணி முதல் ஆறு மணி வரை உள்ள காலம் பிரதோஷ வழிபாட்டுக்காலமாக அனைத்து கிராம மக்களும் இங்கு வந்து இறைவனை தரிசனம் செய்து வருகின்றனர்.

## முடிவுரை

தேனியிலுள்ள பெருங்கோவிலில் ஒன்றான சைவ கோவில் சின்னமனூரில் அமைந்துள்ள பூலாநந்தீஸ்வரர் அமைப்பும் தலவரலாறும் வழிப்பாடுகளும், திருவிழாக் களும், நம்பிக்கைகளும், புராணக்கதைகளும் மன்னர்களின் திருப்பணிகளும், திருவிழாவின் போது மக்களிடையே ஏற்படும் சமூக ஒற்றுமைகளையும் இவ்வாய்வுக் கட்டுரை மூலமாக அறியப்படுகின்றன.

## மேற்கோள்

1. கோம்பைக்குயில் சாமண்டிதாசு தென்பாண்டி நாட்டுத் திருக்கோயில்கள், ப.127.
2. மேலது, ப.128.
3. சு.காந்திதுரை சித்தாந்தமும் சிந்தனையும், ப.31.
4. உ.வே.சாமிநாதையர் சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரையும், ப.148.
5. பெ.சுப்பிரமணியன் தமிழக நாட்டுப்புறவியல், ப.132.
6. எம்.ஆர்.ரகுநாதன் இந்துமதத் தத்துவங்களும் இந்து மதச் சடங்குகளும், ப.90.

## துணைநூற்பட்டியல்


1. கோம்பைக்குயில் சாமண்டிதாசு தென்பாண்டி நாட்டுத் திருக்கோயில்கள், பதிப்பு ஆண்டு - 2009 பதிப்பு விவரம் - முதல் பதிப்பு உரிமை - ஆசிரியருக்கு அச்சிட்டோர் - பி.வி.ஆர்.ஆப்செட், சென்னை.94.
2. சு.காந்திதுரை, சித்தாந்தமும் சிந்தனையும், பதிப்பு - முதல் வெளியீட்டு நாள் - ஜனவரி 2012. அச்சிட்டோர் - தேவன் பிரிண்டர்ஸ் அண்ணாநகர், மதுரை - 10.
3. உ.வே.சாமிநாதையர் சிலப்பதிகாரமும் (மூலமும் அரும்பதஉரையும்) 2, அருண்டேல் கடற்கரைச்சாலை பெசன்ட் நகர், சென்னை - 600 096. 2008.
4. பெ.சுப்பிரமணியன், தமிழக நாட்டுப்புறவியல்
5. எம்.ஆர்.ரகுநாதன், இந்துமதத் தத்துவங்களும் இந்துமதச் சடங்குகளும், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 32 கிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017.